# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

### O.S.96/2021

## CNR.No.TNCB19000

Date: 24.06.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வேலுச்சாமி | **வயது** | 59 |
| **த/பெ** | பழனிச்சாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | காளியப்பனூர், தேக்கம்பட்டி | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 24th June 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. மற்ற வாதிகள் எனது தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் ஆவார்கள். நாங்கள் எல்லோரும் காலஞ்சென்ற எஸ். பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் ஆவோம். என் தாய்மாமா பெயர் எம். பழனிச்சாமி ஆகும். தாவா சொத்துக்கள் ஆதியில் மருதமலை கவுண்டருக்கு சேர்ந்தது. மருதமலை கவுண்டருக்கு 4 பெண்கள் ஒரு ஆண். அவர்களில் 1ம் வாதி ஒரு மகள், எனது தாய்மாமா எம்.பழனிச்சாமி என்பவர் அவரது மகன். மற்ற 3 பெண்களுக்கு தாவா சொத்தில் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து உட்பட 3 காலை எண்கள் .169/1, 169/2 , 168/3 ஆகிய காலை எண்களுக்கு மொத்தம் 8 ஏக்கர் 89 செண்ட் பூமி என்றால் சரிதான்.

வா,சா,. ஆ 1 ஆவணப்படி ஒரு அம்மாசை கவுண்டருக்கு 1 ஏக்கரை மருதமலை கவுண்டர் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்கண்ட 8 ஏக்கர் 89 செண்ட்டும் காரமடை - தேக்கம்பட்டி செல்லும் மெயின் ரோட்டை ஒட்டி தென்புறமாக உள்ளது. அந்த ரோட்டை ஒட்டி உள்ள பூமி க.எண். 168/3 மற்றும் 168/4 என்றால் சரிதான். க.ச.எண்.169/1 பூமியானது சிறிய பகுதி ரோட்டை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அந்த சிறிய பகுதியும் க.ச.எண்.168/4 ம் அம்மாசை கவுண்டருக்கு விற்பனை செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சிறிய பகுதி க.ச.எண.169/1 பி என உட்பிரிவு ஆகி உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்169/1 ன் மற்ற பகுதிகள் 1 ஏ, 1 சி1, 1 சி2 , என்ற மற்ற உட்பிரிவுகளும் ஆகி

உள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கு 2 ஏக்கர் 50 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். எந்த சர்வே எண்ணில் தாவா சொத்து உள்ளதாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் க.ச.எண்.168/3, 169/1, 169/2 ஆகும். நான் 6-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பிராதில் க.ச.எண்.168/3 வழக்கு சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிராதின் சொத்து விபரத்தில் மேற்கண்ட வழக்கு சொத்தில் உட்பிரிவான விபரம் இல்லை என்றால் சரிதான். அயிட்டம் -1 ல் உள்ள சொத்தில் அம்மாசை கவுண்டர் பூமிக்கு செல்லும் ரோட்டிற்கு மேற்கு என்று சொல்லி உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு மேற்படி 8.89 செண்ட் பூமியின் நடுவில் தென்வடலாக உள்ளது என்றால் சரிதான்.

மேற்கண்ட 8.89 ஏக்கர் பூமிக்கு தென்புறமாக அம்மாசை கவுண்டருக்கு பூமி உள்ளது என்றால் பள்ளத்திற்கு மேலே தென்புறத்தில் உள்ளது. எவ்வளவு ஏக்கரா உள்ளது என்று எனக்கு தெரியாது. சுமாராக 4 ஏக்கராவிற்கு மேல் இருக்கும். அந்த பூமிக்கும் மருதமலை கவுண்டர் விற்ற 1 ஏக்கர் பூமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். அயிட்டம் 1 சொத்தின் செக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள ரோடானது மேற்படி 4 ஏக்கரா பூமிக்கு செல்வதற்காக விடப்பட்டது என்றால் சரிதான். அந்த ரோட்டின் நீள அகலம் எவ்வளவு என்றால் எத்தனை செண்ட் என்று எனக்கு தெரியாது. ஆனால் 7-1/2 அடி அகலம் இருக்கும். அந்த ரோடு 168 மற்றும் 169 சர்வே எண்களில்தான் உள்ளது என்றால் சரிதான்.

அந்த ரோடு செல்லும் பாதையில் பள்ளம் உள்ளது பள்ளம் இறங்கிதான் அம்மாசை கவுண்டர் பூமிக்கு செல்ல முடியும். அயிட்டம் 1 சொத்தின் செக்குபந்தியில் எனது இதர பூமிக்கும் கிழக்கு என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அயிட்டம்-1 சொத்தின் செக்குபந்தியில் எனது என்பது யாரை குறிக்கும் என்றால் அது எம். பழனிச்சாமி என்பவரை குறிக்கும் அந்த எம். பழனிச்சாமி என்பவர் தான் பிரதிவாதி ராஜாமணிக்கு பூமியை விற்றவர் என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.06.24 19:26:10 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.